தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
பங்குனி 6, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021
1990, மார்ச் 20, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9 00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்''

வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், ஏற்றுக் கொண்ட செயல், உரிய இடம் ஆகிய ஐந்தினையும், மயக்கம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தருமபுரி மாவட்டத்தில் புதிதாகக் காவல் நிலயங்கள் ஏற்படுத்துதல்

*1033 திரு. வ. முல்லைவேந்தன்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தருமபுரி மாவட்டத்தில் புதிதாக காவல் நிலையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மாவட்டத்தில் புதிதாக காவல் நிலையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. வ. முல்லைவேந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே ஒசூரிலும், கிருஷ்ணகிரியிலும் முறையே 11 காவல் நிலையங்களை உள்ளடக்கிய மாவட்டத் துணை கண்காணிப்பாளர்அலுவலகங்கள் உள்ளன. ஆனால், தர்மபுரியிலே 21 காவல் நிலையங்களை உள்ளடக்கிய ஒரு கண்காணிப்பாளர் அலுவலகம்தான் உள்ளது எனவே, ஹரூர், தர்மபுரி பகுதியை இரண்டாகப் பிரித்து மிகப் பெரிய பகுதியான ஹரூர் பகுதியில் ஒரு மாவட்

துணை கண்காணிப்பாளர் அலுவலகம் திறக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைகளைக் கருத்தில் கொண்டுதான் அவற்றை யோசிக்க இயலும்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப, அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்திடும் வகையில், காவல் நிலையங்களில் காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்திடவும், ரெகுலர் மற்றும் கலால் பிரிவுகளை ஒன்றாக்கிடவும் முதல்வர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல கருத்து; யோசிக்கப்படும்.

திரு. எம். முத்தையன்: தலைவர் அவர்களே, கல்ராயன் மலையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவு சுற்றுவட்டாரத்தில், போலீஸ் ஸ்டேஷன் கிடையாது. சரியான தொடர்பே இல்லை. அதனாலே, ஏகப்பட்ட சிக்கல், தகராறு, வம்புதும்பு இவையெல்லாம் போலீஸ் காதுக்கே சரியாக வருவதில்லை. கல்ராயன் மலையில் ஏற்கனவே போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. அதை எடுத்து விட்டார்கள். எனவே, மறுபடியும் அங்கே போலீஸ் ஸ்டேஷன் வைப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கைகளை இன்னொருவருடைய கேள்வியில் புகுந்துகொண்டு எழுப்பாமல், நேரடியாக அரசுக்கு எழுப்பினால் கவனிக்கப்படும்.

திருவண்ணாமலைக்கு அருகில் இரும்பு கண்டுபிடிப்பு

*5555 திரு. பெ. சு. திருவேங்கடம்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவண்ணாமலைக்கு அருகில் இரும்பு இருப்பதாக ஜப்பான் நிபுணர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதன் முடிவு என்ன?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS